3. கவன ஈர்ப்பு

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வாணியம்பாடி மக்களுக்கு மாற்று மனைகள் ஒதுக்குவது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : துணைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தால் வீடுகளை இழந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மாற்று வீட்டு மனைகள் ஒதுக்காததால் அவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவை செயலர்) : 26-9-78-ந் தேதி வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வாணியம்பாடி வட்டத்தில் அதிகாலை 3 மணியிலிருந்து 5 மணி வரை, பாலாற்றில் திடீர் வெள்ளம் ஏற்பட்டதன் விளைவாக, வாணியம்பாடி நகரில் பாதிக்கப்பட்ட 1,365 குடும்பங்களில் 323 குடும்பங்கள் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவை. மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டிய அனைத்துக் கட்சிக் குழு பாலாற்றங்கரையில் மறுபடியும் குடிசைகள் கட்ட அனுமதிக்கக் கூடாது என்று ஒருமனதாக எடுத்த முடிவுக்கேற்ப, பாதிக்கப் பட்டவர்களுக்குத் தற்காலிகமாக வாணியம்பாடி நகர எல்லைக் கருகிலுள்ள ஆம்பூர்பேட்டையிலுள்ள புஞ்சை தரிசு நிலத்தில் (சர்வே எண். 35/1) குடியேற்றம் நடந்துவிட்டதாகவும், குடியிருப்பில் 17 தெரு விளக்குகள், 4 குடிதண்ணீர்க் குழாய்கள் போன்ற வசதிகள் நகராட்சியினால் செய்யப்பட்டுள்ளன எனவும் மேலும் அதிகக் குடிதண்ணீர்க் குழாய்களும், தெரு விளக்கு களும் போடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன எனவும், வடஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித் துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 3 சென்ட் வீட்டு மனை வீடு கட்டிக்கொள்ள விதிகளுக்கிணங்க வழங்கு மாறு 5-10-1978 அன்று மாவட்ட ஆட்சியருக்கு அரசு ஆணையிட் டுள்ளது. 92 ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரிசன நலத் துறையால் வாணியம்பாடி நகர எல்லைக்குள் வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 231 ஆதி திராவிட குடும்பங்களுக்கும், மற்ற வகுப்பைச் சார்ந்த 1,042 குடும்பங்களுக்கும் வீட்டு மனை வழங்குவதற்கு ஆம்பூர்பேட்டை கிராமத்திலும், வளையம் பட்டு கிராமத்திலும் 54,96 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. இந்நிலத்தில் 15.56 ஏக்கர் புறம்போக்கு

நிலம், 39.40 ஏக்கர் பட்டா நிலம். பட்டா நிலத்தை. நில எடுப்புச் சட்டத்தின் கீழ் எடுப்பதற்கு, மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து வருகிறார். அங்கு சகஜ நிலை நிலவுவதாக அறியப்படுகிறது.....

திரு. எம். ஏ. லத்தீப்: துணைத் தலைவர் அவர்களே, அங்கே பாதிக்கப்பட்டவர்களுக்குத் தரிசு நிலங்கள் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இது உண்மைக்கு எவ்வளவு மாறானது என்று இந்த மன்றத்தில் அந்தப் பகுதிக்கு அக்கம்பக்கத்திலே உள்ள தொகுதி உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். தயவுசெய்து இப்பேர்ப்பட்ட உண்மைக்கு மாறான தகவல்களைத் தந்தால் அந்த கலெக்டர்மீது நாங்கள் இங்கே உரிமைப் பிரச்சினை கொண்டுவருவதற்கான அவசியம் ஏற்பட்டுவிடும். பொட்டல் நிலம்கூட இல்லை, மலைப் பகுதியில் வெறும் பாறை நிறைந்த பகுதியில் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள், ஏதோ 8, 10 நாட்களுக்கு இருக்க வேண்டுமென்று சொல்லி இன்றைக்கு அங்கே அவர்களுக்கு நிரந்தரமாக இடம் கொடுத்துவிட்டோம் என்று சொல்லி இவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் இன்றைக்கு மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள், அவர்கள் அதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அரசு தனியாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும், ஏதோ தரிசு நிலம் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல, உடனடியாக அவர்களுக்கு நிலம் கொடுக்க அரசு முன்வருமா ?

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவை செயலர்): திரு. லத்தீப் அவர்கள் ஏற்கெனவே 11-4-79 அன்று இந்தச் சபையில் பேசுகின்றபோது பெரிய சலனங்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டார்கள். தொடர்ந்து அவர் ஆற்றிய உரையின்போது மேற்கொண்டு சில தகவல்களைத் தந்திருக்கிறார்கள். பாலாற்றில் வெள்ளம் ஏற்பட்டு அதற்குரிய நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதையெல்லாம் சொன்னார்கள். திரு. லத்தீப் அவர்களும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்களும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் இராஜா முகமது அவர்களும் அந்தப் பகுதிக்குச் சென்றார்கள். மொத்தம் 54.96 ஏக்கரா நிலம் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளது. அதில் 15.56 ஏக்கர் அரசு நிலம், மீதி 39.40 ஏக்கர் நிலம் பட்டா நிலம். பட்டாநிலத்தை நில எடுப்புச் சட்டத்தின் கீழ் எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்தப் பகுதியில் 17 தெரு விளக்குகள், 4 குடிதண்ணீர்க் குழாய்கள் போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக் கின்றன. இதுபோன்ற விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்

1979 ஏப்ரல் 16] [திரு. பி. முசிறிப்புத்தன்]

லத்தீப் அவர்கள் அறிவார்கள். இருந்தாலும் சில தகவல்கள் தவறாக அரசுக்கு தரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எந்த வகையில் தவறு என்று அவர்கள் குறிப்பிட்டால் அரசு உரியவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தவறு நடந்திருப்பது ஒன்றுதான். அவர்களுக்கு வேண்டிய பட்டா மனைகள் கொடுக்கப்படவில்லை. அவர்கள் இன்றைக்குத் தெருவிலே நின்றுகொண்டிருக்கிறார்கள் பாறைகள், குன்றின் மேல் உள்ள பகுதிகளில் அவர்கள் நிற்கிறார்கள். வீட்டு மனைகள் கொடுக்கப்படவில்லை. அது தான் அடிப்படை தவறு, அது கொடுக்கப்படவில்லை. அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத்தான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவை செயலர்) : மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்தக் குடியிருப்பு ஏற்ற இடத்தில் இல்லை என்று சொல்கிறார்கள் அதற்குரிய முறையிலே அவர்கள் குறிப்பு தந்தால் உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை

திரு. பா. க. சி. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே. 1973-74 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கை இவற்றின் மீதான பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை (எட்டாவது அறிக்கை) தலைவர் சார்பாக அளிக்கிறேன்.

5. வரவு - செலவுத் திட்டம், 1979-80 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

அ. கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்

ஆ. கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்

திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு